# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:102:2022 நாள்: 02.01.2022

அன்பார்ந்த தோழர்களே,

## துணைநிலை ஊழியர் பதவி உயர்வு

யூனியன் வங்கி நிர்வாகத்திற்கும் அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள பதவி உயர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், நிர்வாகம் துணைநிலை ஊழியர்களிலிருந்து எழுத்தர்களுக்கான, பதவி உயர்வுத் தேர்வை நடத்தவுள்ளது.

துணைநிலை ஊழியர்களிலிருந்து எழுத்தர்களாக பதவி உயர்வு வழங்க 304 பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. நமது ஒப்பந்தத்தின் அடிப்படையில், கீழ்க்கண்டபடி பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது:

| விவரம் | SC | ST | General | மொத்தம் |
|---|---|---|---|---|
| பணிமூப்பு அடிப்படையில் | 24 | 16 | 112 | 152 |
| தகுதி அடிப்படையில் | 25 | 15 | 112 | 152 |
| மொத்தம் | 49 | 31 | 224 | 304 |

தமிழகத்திலிருந்து துணைநிலை ஊழியர்களிலிருந்து பணி மூப்பு அடிப்படையில் 9 தோழர்களுக்கும், தகுதி அடிப்படையில் 9 தோழர்களுக்கும் கீழ்க்கண்டபடி பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

| விவரம் | SC | ST | General | மொத்தம் |
|---|---|---|---|---|
| பணிமூப்பு அடிப்படையில் | 2 | 1 | 6 | 9 |
| தகுதி அடிப்படையில் | 3 | - | 6 | 9 |
| மொத்தம் | 5 | 1 | 12 | 18 |

துணைநிலை ஊழியர்கள் விண்ணப்பிக்க கடைசி நாள் 13.01.2022. தேர்வு நடைபெறும் நாள்: 20.02.2022.

## சிறப்பு பயிற்சி வகுப்புகள்:

கடந்த பல ஆண்டுகளாக நமது சங்கம், பதவிஉயர்வுக்கு உதவும் வகையில் சிறப்பு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்த ஆண்டும் எழுத்தர்களாகப் பதவிஉயர்வு பெற விண்ணப்பித்துள்ள தோழர்களுக்கு கீழ்க்கண்டபடி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளது :

**இடம் : ஹோட்டல் இந்தியன் பிளாசா, 68, மூர் தெரு, மண்ணடி, சென்னை - 1**
**(GPO பின்புரம் - பீச் ரயில் நிலையம் எதிரில்)**

**நாள் : 19.02.2022 - சனிக்கிழமை**

**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை**

சங்க வேறுபாடு இல்லாமல், விருப்பமுள்ள அனைத்து தோழர்களும், இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பதவிஉயர்வு பெற வாழ்த்துகிறோம்.

## சென்னையில் தங்குவதற்கு:

சென்னைக்கு பதவி உயர்வுத் தேர்வு மற்றும் OBC, SC/ST பயிற்சி வகுப்புகளுக்கு வரும் தோழர்களுக்கு கீழ்க்கண்டபடி பயணப்படியும், விடுதியில் தங்கும் செலவும் வங்கி நிர்வாகத்தால் வழங்கப்படும்.

| | |
|---|---|
| பயணப்படி (Halting Allowance) | ரூ. 750/- (நாள் ஒன்றுக்கு) |
| விடுதியில் தங்குவதற்கு (Lodging Expenses) | ரூ.1,250/- (நாள் ஒன்றுக்கு) |

விடுதியில் தங்கும் தோழர்களுக்கு பயணப்படியாக நாள் ஒன்றுக்கு ரூ.187.50 வழங்கப்படும். விடுதில் தங்காதவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.750/- வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் மதிய உணவு நிர்வாகத்தால் வழங்கப்படும்.

சென்னைக்கு வந்து செல்ல ரயிலில் AC III Tier கட்டணம் வழங்கப்படும்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

அ.சிதம்பரம்

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**